2022 ஜனவரி 6] [பேரவைத் தலைவர்]

திரு. வே. கண்ணன் அவர்கள் 2006–2011 ஆம் ஆண்டுகளில் செஞ்சி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சீரிய முறையில் பணியாற்றினார்கள்.

திரு. பெரி. சண்முகம் அவர்கள் 1971–1976 ஆம் ஆண்டுகளில் திருவாடனை தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு பாராட்டத்தக்க வகையில் பணியாற்றினார்கள்.

திரு. எஸ். அண்ணாமலை அவர்கள் 1991–1996 ஆம் ஆண்டுகளில் ஆலந்தூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நன்கு பணியாற்றினார்கள்.

டாக்டர் எம். மோசஸ் அவர்கள் 1971–1976, 1989–1991, 1991–1996 மற்றும் 1996–2001 ஆகிய ஆண்டுகளில் நாகர்கோவில் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறந்த முறையில் பணியாற்றினார்கள். மேலும், 1978–1984 ஆம் ஆண்டுகளில் மாநிலங்களவை உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார்கள்.

இம்முன்னாள் உறுப்பினர்களது மறைவால் அவர்களைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

முற்பகல் 10–05

2. இரங்கல் தீர்மானங்கள்

(அ) டாக்டர் கோ. ரோசய்யா, தமிழ்நாடு முன்னாள் ஆளுநர் அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரங்கல் தீர்மானங்கள். தமிழ்நாடு முன்னாள் ஆளுநர் டாக்டர் கோ. ரோசய்யா அவர்கள்

4–12–2021 அன்று உடல் நலக்குறைவால் மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது. அரசியலில் முதிர்ந்த அனுபவம் கொண்ட டாக்டர் கோ. ரோசய்யா அவர்கள், ஆந்திர மாநிலத்தின் முதலமைச்சராகவும், தமிழ்நாடு மற்றும் கர்நாடக மாநிலங்களின் ஆளுநராகவும் பணியாற்றியவர். மேலும், அவர் சட்டமன்ற உறுப்பினர், மேலவை உறுப்பினர் மற்றும் மக்களவை உறுப்பினராகவும் சிறப்புறப் பணியாற்றியவர். அன்னாரது மறைவால் அவரைப் பிரிந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கு இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறது.

(ஆ) இந்திய முப்படைத் தலைமைத் தளபதி திரு. பிபின் ராவத், அவரது மனைவி மற்றும் இராணுவ உயர் அலுவலர்கள் ஹெலிகாப்டர் விபத்தில் உயிரிழந்தது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்திய முப்படைத் தலைமைத் தளபதி பிபின் ராவத், அவரது மனைவி மற்றும் 11 இராணுவ உயர் அலுவலர்கள் 8–12–2021 அன்று ஹெலிகாப்டர் விபத்தில் உயிரிழந்தது குறித்தும், அவ்விபத்தில் படுகாயமுற்று சிகிச்சைபெற்று வந்த குரூப் கேப்டன் வருண் சிங் 15–12–2021 அன்று உயிரிழந்தது குறித்தும் இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது. தாய்த் திருநாட்டின் வீரத் திருமகனாக முழுமையாக தன்னை அர்ப்பணித்துக் கொண்டு பணியாற்றியவர் முப்படைத் தலைமைத் தளபதி பிபின் ராவத் அவர்கள். தீரமும் கடமையுணர்வும் கொண்டு பணியாற்றியவர் குரூப் கேப்டன் வருண் சிங் அவர்கள். இராணுவ உயர் அலுவலர்களின் மறைவு இந்திய நாட்டிற்கு ஈடு செய்ய முடியாத இழப்பாகும். இந்த ஹெலிகாப்டர் விபத்தில் தனது இன்னுயிரை இழந்த இந்திய முப்படைத் தலைமைத் தளபதி திரு. பிபின் ராவத், அவரது மனைவி மற்றும் 11 இராணுவ உயர் அலுவலர்கள் மற்றும் விபத்தில் காயமுற்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்த குரூப் கேப்டன் வருண் சிங் ஆகியோரது குடும்பத்தினருக்கும், இந்திய இராணுவத்திற்கும், இந்நாட்டு மக்களுக்கும் இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறது.

(இ) திரு. வே. துரைமாணிக்கம், தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் பொதுச் செயலாளர் மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் பொதுச் செயலாளரும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின்